District Marketing Society Election.

* 186. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a riot broke out during District Marketing Society Election in Kurichikottai Village near Udumalpet, Coimbatore District ;

(*b*) whether the two parties attacked each other with rifles ; and

(*c*) the action taken by the Government in this regard?

மாவட்ட மார்க்கட்டிங் சொசைட்டி தேர்தல்.

திரு பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டையை அடுத்த குறிச்சி கோட்டை கிராமத்தில் மாவட்ட மார்க்கட்டிங் சொசைட்டி தேர்தலில் கலவரம் ஏற்பட்டது உண்மையா ?

(இ) அதில் இரு கோஷ்டியினர் துப்பாக்கி கொண்டு தாக்குதல் நடத்தினரா ?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) ஆம்.

(உ) பிரிவு 307 ஐ.பி.சி.யின் கீழ் தளி (Dhali) காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

Post-graduate Courses in Seed Technology.

*187 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any Post-graduate Courses in Seed Technology are to be started in this State ; and

(*b*) if so, the details thereof ?

1973 டிசம்பர் 3]

விதை தொழில் நுட்பவியலில் பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள்.

திரு வ. ஈஸ்வரமூர்த்தி (திரு எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், விதை தொழில் நுட்பவியலில் பட்ட மேற் படிப்புப் பாடமுறைகள் எதேனும் தொடங்கப்படவிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) 1973–74-ஆம் ஆண்டிலே எம். எஸ்ஸி. அக்ரிகல்ச்சர் மேல் பட்டப்படிப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. ஆறு மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

திரு எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, எம். எஸ்ஸி. அக்ரி கல்ச்சர் மதுரையிலே இருக்கின்ற விவசாயக் கல்லூரியிலும் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதா அல்லது கோயம்பத்தூர் விவசாயக் கல்லூரியில் மட்டும் செயல்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, 6 மாணவர்கள் என்று இருக்கிறது. எந்த ஊரில் எத்தனை மாணவர்கள் என்ற குறிப்பு என்னிடம் இல்லை.

Strikes in Coimbatore Mills.

*188 *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether any strikes have taken place in Coimbatore Mills run by Tamil Nadu Textiles Corporation during this month ; and

(*b*) if so, the duration of the strikes and the methods by which these strikes have been settled ?

கோவை பஞ்சாலைகளில் வேலை நிறுத்தங்கள்.

திரு காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு ஜவுளி கார்ப்பரேஷன் ஏற்று நடத்துகிற கோவை பஞ்சாலைகளில் இந்த மாதத்தில் வேலை நிறுத்தங்கள் எதும் நடைபெற்றனவா ?